<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 39/2024

இன்று 2024 ம் ஆண்டு ஜுலை திங்கள் 19 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : பழனிச்சாமி

தந்தை பெயர் : ராமன்

வயது : 47

<u>முதல் விசாரணை</u>

வாதிகள் ஆஜர். பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினராக உள்ளார்கள். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

30.03.2017 – வாதிகள் பெயரிலுள்ள கிரய ஆவணம் அசல் **வா.,சா.ஆ.1**

28.09.2022 – திருப்பூர் வட்டாட்சியர் ஏற்படுத்திய உத்தரவின் அசல் **வா.சா.ஆ.2**

29.02.2022 – திருப்பூர் தெற்கு வீரபாண்டி புல எண் 165/28 க்குரிய நத்தம் நில துாயவரி சிட்டா உண்மை நகல் **வா.சா.ஆ.3**

29.02.2022 – திருப்பூர் தெற்கு வீரபாண்டி புல எண் 165/29 க்குரிய நத்தம் நில துாயவரி சிட்டா உண்மை நகல் **வா.சா.ஆ.4**

04.01.2024 – திருப்பூர் தெற்கு வீரபாண்டி புல எண் 165 க்குரிய புல வரைபடம்உண்மை நகல் **வா.சா.ஆ.5**

02.12.2023 – வீட்டு வரி ரசீது **வா.சா.ஆ.6**

02.12.2023 – தண்ணீர் வரி ரசீது **வா.சா.ஆ.7**

1ம் வாதி பெயரிலுள்ள மின் கட்டண அட்டை அசல் **வா.சா.ஆ.8**

1,2 வாதிகளின் ஆதார் அட்டை ஒளி நகல் **வா.சா.ஆ.9** (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

தாவாப்படி உத்தரவாக கேட்டுக் கொள்கிறேன்.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.07.19 17:40:02 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.